
# யமரியாதைத்

## தத்துவ கீதங்கள்




வெ. இராமசாமிப் பெரியார்

யமரியாதை இயக்கத் தலைவர்.

1930

[விலை அணா 4

R34
N30
121312

# சுயமரியாதைத்

## தத்துவகீதங்கள்

ஆக்கியோன்

**ப. நாராயணன்**
கடம்பங்குளம்

மதுரை,
விவேகானந்த பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

..ர் காபிரைட்] 1930 [விலை அணா 4.

R34
N30

121317

# உள்ளுரை


| எண் | பம். | பக்கம். |
|---|---|---|
| 1. | சுயமதிப்பு | 10 |
| 2. | எங்கள் வேலை | 12 |
| 3. | பாப்பாப் பாட்டுக்கள் | 15 |
| 4. | மக்களை அழைத்தல் | 17 |
| 5. | உயர்ந்தோர் என்பவரை வினவுதல்? | 20 |
| 6. | எந்நாட் கண்மணிகள் | 22 |
| 7. | பேதசாத்திர விளக்கம் | 23 |
| 8. | இது செய்யிற்றோசமில்லை | 25 |
| 9. | பகுத்தறிவு | 27 |
| 10. | சாதிபேத விளக்கம் | 29 |
| 11. | சுயமரியாதைப்பெருமை | 31 |
| 12. | கள்ள நடிப்பு | 32 |
| 13. | கற்பனை காதற் பாட்டுக்கள் | 33 |
| 14. | மாதர்கள் | 36 |
| 15. | அண்ணன் பாட்டுக்கள் | 39 |
| 16. | தம்பி பாட்டுக்கள் | 44 |
| 17. | மக்களின் துயிலெழுச்சி | 47 |
| 18. | சுயமரியாதை யியக்கத்தலைவர் ஈ. வே இராமசாமிப் பெரியார் வாழ்த்து | 48 |

| | | |
|---|---|---|
| 19. | அறநெறித்திரட்டு | 50 |
| 20. | கள்ளுண்ணாமை | 55 |
| 21. | க்ஷெ | 57 |
| 22. | நிலாப்பாட்டு | 58 |
| 23. | தீண்டாமை | 59 |
| 24. | முறையிடல் | 60 |
| 25. | ஆதரவு கூறல் | 61 |
| 26. | தாலாட்டு | 62 |
| 27- | சமத்துவப்போர் | 64 |
| 28. | அறம் வாழ்க அல்லாதன வீழ்க | 65 |
| 29. | சுதேசியம் | 66 |
| 30. | கல்வி | 66 |



**இப்புத்தகம் கிடைக்குமிடம்,**

**ப. நாராயணன்,**

**கடம்பங்குளம்,**

பாலவனத்தம் போஸ்டு,

(விருதுநகர் வழி.)



ஆசிரியர் ப. நாராயணன்

# முகவுரை

கடம்பங்குளம் சுயமரியாதைத்தொண்டர், உயர் திரு ப. நாராயணன் அவர்களால் பாடப்பெற்ற "சுயமரியாதைத் தத்துவகீதங்கள்" என்னும் பாடல்களில் பலவற்றைப்பார்த்தேன். இதுவரை சுயமரியாதைக் கொள்கைகளைக் கொண்ட பாடல்கள் என்பதாக எத்தனையோபேர்கள் பாடி எனக்குக் காட்டியவைகளையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அவைகள் எல்லாவற்றையும் விட திரு. நாராயணன் அவர்கள் பாடல்களே மேலானது என்பது எனதுஅபிப்பிராயம். ஏனெனில் அவைகள் பெரிதும் எளியநடையில் யார்க்கும் புரியும்படியும் நல்லகருத்துக்களை மிகக் கண்ணியமுறையில் அமைத்துப் பாடியிருப்பதோடு பாட்டுகள் எல்லாம் அநேகமாய் பாரதியார் பாட்டு மெட்டுக்களிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்தப்பாட்டுக்களை ஒருவர் பாடினால், பக்கத்திலிருந்து கேட்பவர்கள் பாரதிபாடலோ இது என்று சந்தேகிக்கும் படியான மாதிரி அவ்வளவுஅழகாயும், வெள்ளையாயும் பாடப் பெற்றிருக்கின்றது. மகாநாடுகளிலும், வெறுங்கூட்டங்களிலும். பாடுவதற்கு மற்றபாட்டுக்களைவிட இவை மிகவும் மேலானதென்றே அபிப்பிராயப்படுகின்றேன்.

ஆகையால் சுயமரியாதை இயக்கத்திலும், கொள்கையிலும் பற்றுடைய மக்கள் இந்தப் பாட்டுக்களை இளைஞர்களும் பள்ளிப்பிள்ளைகளும் படித்துப் பாடம் பண்ணும்படியாகச் செய்யவேண்டிய உதவி செய்யவேண்டியது முக்கிய கடமையாகும்.

ஈரோடு
14—5—30.

ஈ. வெ. இராமசாமி

## சாற்றுக் கவிகள்

அழகியநல்லூர் சுயமரியாதைப்பாவலர்
திருவாளர் தி. அ. வேங்கிடசாமி அவர்கள் இயற்றிய
அறுசீர்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

---

1. கல்லதனைக் கடவுளென்று காட்டியே பொருள்பறிக்குங்
கபடம்போல
அல்லலுறும் மக்கள்தமைக் காங்கிரஸ்பே ருடன்காந்தி
யையன்பேரைச்
சொல்லியே யேமாற்றிச் சுயநலத்தைப் பெருக்குகொடுஞ்
சூதுக்காரர்
தொல்லையினை யொழித்திடுவான் சுயமரியாதையினியலைத்
தோற்றஞ்செய்தே

2. சாதிமதம் சடங்குபுரா ணப்பழங்குப் பையின்மழுங்கித்
தகைமைநீங்கி
எதமுறும் மாந்தர்பகுத் தறிவுமணி யாராச்சி
யினிற்கடைந்தே
சோதியுறச் செய்தருள்சூ ரன்வைக்கம் வீரனடிச்
சுவட்டைப்பற்றி
நீதிவளர்த் தருளறிஞன் நீள்கடம்பங் குளநகர்வாழ்
நேயமிக்கான்

3. எழையற்குச் செயுந்தொண்டே இறைவன்தொண்
டெனுமுண்மை யினையுந் தாழ்ந்தோர்க்
கூழியஞ்செய் பவர்பெரியர் ஊழியங்கொள் பவர்சிறிய
ரெனலு மோர்ந்து

தோழமைகொண் டனைவருக்கும் நலம்புரிநா ராயணவேள்
துணிவிற்சொற்ற
வாழிசுய மரியாதைப் பாடலின்மாண் பென்னனையர்
வழுத்தற்பாற்றே

4. பிறவியினுல் தாழ்வுயர்வு கற்பிக்கும் பித்தர்பிணிக்
கருமருந்து
வறியர்பெண்டீர் விதவையர்தீண் டார்தாபந்தவிர்க்கவரு
மமுதக்கும்பம்
குறுகியவை தீகமதக் குடுக்கைகளைத் தகர்த்தெறியும்
குடாரிமேலாம்
அறிவென்னும் கொடிபடர அருஞ்சுனைநீர்க்கொழுக்
அமைந்ததாலோ [கொம்பாய்]

---

கல்லூரணி, சுயமரியாதை வீரர்
திருவாளர் க. அ. புன்னைமுத்து அவர்கள்இயற்றிய
அறுசீர்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

---

காரோட்டும் இரவியெனச் சாதிமதத் திமிரந்த
காரந்தன்னை
நேரோட்ட மெடுப்பிக்கும் நீள்ஞானக் கதிரொளியாய்
நிலமேல்மன்னிப்
பாராட்டும் பகுத்தறிவாம் சுயமரியா தைப்பாடல்
பகர்ந்தான் பாரோர்
சீராட்டும் செழுங்கருணை திகழ்தமிழ்நா ராயணப்பேர்ச்
செல்வன் மாதோ

---

**மேட்டுக்குண்டு, சுயமரியாதை அன்பரும் இந்நூலாசிரியரது ஆப்த நண்பருமாகிய திருவாளர் சி. சு. மு. சு. அருணாசலம் அவர்கள்இயற்றிய அறுசீர்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்**

---

1. இப்புவியி லுளபெண்டி ரிடும்பைதனைப் போக்கவந்த
இடியேறாயும்
செப்பரிய மைந்தருக்கு வழிகாட்டி யாகவந்த
தீபம்போலும்
இப்பெரிய நாட்டினர்தம் பெருந்துயிலை நீக்கவந்த
எழுச்சியாயும்
ஒப்புவமை யிலாதநம் நாராயணனும் பாட்டிசைத்தான்
உவப்பம் யாமே

2. வேறு.

அறிவோர்க்குத் தெள்ளமுதாய் அஃதில்லார்க் குச்சுடராய்
வறியோர்க்கு விதிவிலக்காய் வயிறுவளர்க்க ஏமாற்றுஞ்
சிறியோர்க்குப் பெருமிடும்பாய்ச் செல்வர்க்குத் துணைநலனாய்
அறிவோன் நாராயணனின் பாட்டுகள்தா மமைந்ததன்றோ.

**மதுரை ஜில்லா, ஜமீன் சிறுவாலை ஸமஸ்தானத்தலைமைத்தமிழ்ப் புலமையினரும், அம்பலத்தாடி, மாபெரும் வேளாண்மை யாளரும் ஆகிய திருவளர், வித்வான் பஹதூர் வீ. எஸ். வீரண்ணா அவர்கள் மகிழ்ந்தெழுதியசாற்று**

வெண்பா

தன்மனத்தி லுற்றோங்குந் தன்மைதனைப் பைந்தமிழில்
தன்மநத்திச் சொற்றானித் தாரணியில்—சன்ம
சுயமரி யாதைச் சுபதத்வ கீத
நயமுறை நாராய ணன்

---

மதுரை

விவேகானந்தாபிரஸ் ரைட்டர்

மதுரகவி

**வீ. நடராஜன் அவர்கள்**

இயற்றியது

---

1. தாலமுறுந் தேகமெலாந் தாதுதிரக் கூட்டெனவே
தம்முட் டேர்ந்தும்
சாலமிக வேநடித்துத் தாழ்வுயர்வு பாராட்டிச்
சாத்தி ரங்கள்
கோலமுறத் தீட்டியதற் கேற்றபடி யாட்டுவிக்குங்
கூற்றி னோர்கள்
ஓலமிடச் சுயமரியா தைப்பாட லெனவொருநூல்
உரைத்தா னம்மா

2. அத்தகையா னூரெனினல் லரியகலை யாய்ந்துதிகழ்
அறிவின் மிக்கோன்
முத்தமிழும் வளர்பாண்டித் துரைச்சாமி மகிபனுறை
மூதூர் சார்ந்த
சித்திரப்பூங் காவனஞ்சூழ் கடம்பங்குள நகரதனிற்
சிறந்து வாழ்வோன்
பத்திவழி தவறுதான் நாராய ணப்பெயர்கொள்
பாவ லோனே

---

# முன்னுரை

அன்புடையீர்!

மக்களுக்குள் சமத்துவமில்லாக்குறைகளை ஆய்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கே சுயமரியாதை இயக்கத்தை நமது மாபெருந்தலைவர் ஈ. வெ. இராமசாமிப் பெரியார் தோற்று வித்து, இன்று சுமார் ஐந்தாறு ஆண்டுகளேஆயினும் அது தமிழ்நாடெங்கணும் அநேக எதிர்ப்புக்களினிடையில் பிரகாசித் துக்கொண்டிருக்கின்றது. அவ்வேகத்தில் என்னையும்அப்புனித இயக்கத்தில் ஈடுபடச் செய்தது பகுத்தறிவோங்கிய குடியரசு பத்திரிகைதான் என்பது மிகையாகாது.

அப்பத்திரிகையின் அன்புபொருந்திய வாசகங்களையே திரட்டி பாட்டுருவாக்கி அதற்கு சுயமரியாதைத்தத்துவகீதங் கள் என்று பேரிட்டு தமிழ்நாட்டினிடை சமர்ப்பித்துள்ளேன். அதை எல்லோரும் வாங்கிப்படித்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூலுக்கு மனமுவந்து முகவுரை எழுதித்தந்த எமது தலைவர். ஈ. வெ. இராமசாமிப்பெரியார் அவர்களுக்கும், சாற்றுக்கவியளித்து உத்சாகப்படுத்திய உயர் திருவாளர்கள். அழகியநல்லூர் சுயமரியாதைப்பாவலர், வெங்கிடசாமி அவர் களுக்கும், கல்லூரணி சுயமரியாதை வீரர், புன்னைமுத்து அவர் களுக்கும், மெட்டுக்குண்டு, சுயமரியாதையன்பர், சி. சு. மு. சு. அருணாசலமவர்களுக்கும், மதுரை விவேகாநந்தா பிரஸ் ரைட் டர் மதுரகவி, வீ. நடராஜன் அவர்களுக்கும், சிறுவாலை ஜமீன், அம்பலத்தாடி வீ. எஸ். வீரண்ணா அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுளேன்.

ஆக்கியோன்

**ப. நாராயணன்**

# சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்

## மக்களைவேண்டல்

எல்லா மக்களு மேநல மெய்திடச்
சொல்லு வேன்பாடல் சுயமரி யாதையை
நல்லவர் கூடியே நாடுவீர் நாடுவீர்
மெல்ல யாவரும் மேவலாமின்பமே

## அவையடக்கம்

வல்லபண் டிதர்கள்பாட்டு வழங்கிடுந் தமிழர்நாட்டில்
சொல்லதின் தொகைகாணுநான் சுயமாயிக் கீதமாக்கல்
மெல்லிய மயிலுந்தோகை மேலெழ ஆடக்கண்ட
மல்லில்வான் கோழியுந்தன் வாகிலா ஆடல்போலாம்

## 1. சுயமதிப்பு

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.)

பல்லவி

சுயமதிப் புடனேநாம் வாழ்வோம்—நம்
சோதரர் யாவரும் ஒன்றென் றுணர்வோம் (சுய)

சரணங்கள்

1. அன்பு பெருகிட வேண்டும்—நல்ல
ஆர்வம் பெருகி வளர்ந்திட வேண்டும்
என்பு கொடுத்தேனும் ஏழை—மக்கள்
இடர்களைத் தீர்த்திட எண்ணுவோம் நாமே (சுய)

2. சாதியெல் லாமொன்று என்போம்—நம்
சமயமெல் லாமுமொன் றென்றுரைத் திடுவோம்
நீதி அறிந்திட வேண்டும்—நல்ல
நிலைகளறிந்திட வேண்டி யுழைப்போம் (சுய)

3. ஓதி உணர்ந்ததை யெல்லாம்—மக்கட்
குரைத்திட வேண்டுமென் றேயறிந் திடுவோம்
ஏதும் அறியாரைக் கண்டால்—நாம்
இழிவு படுத்துத லீனமென் றறிவோம் (சுய)

4. மக்களிற் பேதங்கள் கொண்டு—நாம்
மயங்கித் திரிவது பாவம தாகும்
தக்க மனிதரே யாரும்—ஒரு
தாயின் புதல்வரே நாமனை வோரும் (சுய)

5. கண்டிடுங் கோயில்க ளெல்லாம்—நாம்
கட்டி அழுதால் பயனென்ன வாகும்
பண்டு முடிவறி யாத—ஒரு
பரமுமே வுண்டெனும் பாரத தேசம் (சுய)

6. எங்கும் அதுவா யுலகை—நிதம்
இயக்கிடுஞ் சக்தி யதுவெனச் சொல்வார்
சங்கு முழக்கிடு வோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத் தோதிடு வோமே (சுய)

7. கோயிலைக் கட்டியே நாமும்—சும்மா
கும்பிட்டுக் கும்பிட்டு வீழ்ந்தது போதும்
வாயில்லாப் பாலர்க ளுக்கு—எழுத்து
வகைசொல்லும் பள்ளியை வரிசையாய் நாட்டு (சுய)

8. சுயமரி யாதையின் றண்டு—அதனுற்
சுதந்திரம் பெற்றிட வகைக ளறிவோம்
பயமகன் றிடுமக்கள் தமக்கு—பிறகு
பக்குவ மாகிடும் பாரத தேசம் (சுய)

9. கோயிலுக் குள்சிலர் சென்றால்—நாம்
கும்பிடுஞ் சாமியுங் குடிவிட்டுப் போமாம்
நாயுஞ் சிலசம யத்தில்—நாம்
நட்டிடுஞ் சாமிக் கருகினில் போமே (சுய)

10. சூத்திர ரென்றுமே நம்மை—மனஞ்
சுடச்சுடச் சொல்லித் துளைக்கிறார் நெஞ்சை
ஆத்திரம் பொங்குதென் செய்வோம்—நம்மில்
அறிவில்லா மக்களும் ஆமெனும் போது (சுய)

## 2. எங்கள் வேலை

(பாரதியாரின், பாரததேசமென்று
பெயர்சொல்லுவோம் என்ற மெட்டு)

பல்லவி

சாதியழிப்போம் வெறுஞ் சடங்கழிப்போம்—கொடுஞ்
சாத்திரக் குப்பையெல்லாஞ் சேர்த்தொழிப்போம் (சாதி)

சரணங்கள்

1. சாதியி லுயர்ந்தோமென்று பட்டஞ்சூட்டி—பல
சாத்திரங்கள் தானெழுதிக் கோர்த்துவைத்து
வீதியில் வரவிடாது தடுக்குகின்றார்—இந்த
வீணர்க ளுக்குமதி கொடுத்திடுவோம் (சாதி)

2. மாதரை யிட்டுவந்து கோயில்கள்தோறுஞ்—சில
மடையர்கள் சாமிபேரால் பொட்டுமேகட்டி
தீதே புரியவிட்டுத் தேவடியாளை—இவர்
தினமு மனுபவிக்கும் செய்கை போக்குவோம் (சாதி)

3. சாதிக் குருக்களென்று வயிறு வளர்ப்பார்—பலர்
சமயக் குருக்களென்று பொருள்பறிப்பார்
நீதிப் புலவரென்று ஓடிவருவார்—பல
நீள்சடை யோடுசில ராடிவருவார் (சாதி)

4. பாழுங் கிழவனுக்குப் பத்துவயதுச்— சிறு
பாலகியை மாலையிடும் பான்மையொழிப்போம்
வாழும் பருவப்பெண்ணை விதவையென்று— வீட்டுள்
வைத்தடக்கும் பாமரருக் கெடுத்துரைப்போம் (சாதி)

5. அன்னை யிறந்தபின்பு ஐயகோஇந்த
ஆரியருக் கீந்தபொருள் ஆர்பசியாற்றும்
சின்னவ ரேழைய ரதிதிகட்கெல்லாஞ்
சிறந்த வுணவுமதிக் கல்வியளிப்போம் (சாதி)

6. பக்கத்து வீட்டிலுள்ள பாலர்பசியால்
பரிதவித் துடல்வியர்த் தயர்ந்துநிற்க
தக்க தருமமென்றும் பாற்குடங்களை
சாமிக்கென்று கல்லிற்கொட்டுஞ் சாலமழிப்போம் (சாதி)

7. சாதி பிரித்தபல நூல்களையெல்லாஞ்
சமுத்திரத்துத் தண்ணீரிலே நாமமிழ்த்துவோம்
நீதி யுயர்ந்தமதி நூல்களைக்கற்று— நல்ல
நிலையடை வோஞ்சுய மதியடைவோம் (சாதி)

8. செல்வர் வறியரென்ற பேதங்காட்டோம்
தேர்ந்தமதி யுள்ளவரை நாங்கள்மதிப்போம்
கல்வி யிருந்ததினல் நாங்கள்மதியோம்
கருணை நிறைந்தமதிக் கல்விவேண்டுவோம் (சாதி)

9. கடவுளைக் காப்பதற்குக் கங்கணங்கட்டோம்
காப்பதற்குக் காங்கிரசு! ஆத்திக!! ருண்டு
படரும் பகுத்தறிவைப் பாலருக்கெல்லாம்
பாலோடு ஊட்டுவித்து நாங்கள்வளர்ப்போம் (சாதி)

10. பாடுபட்டுத் தேடிய பணங்களையெல்லாம்
பாதைவழி நாமிறைத்தோம் யாத்திரைக்கென்று
கேடுகெட்ட தண்ணீரெல்லாந் தீர்த்தங்களென்று
கிறுக்கரைப் போலவினி நாங்கள் குளிக்கோம் (சாதி)

11. விதவா விவாகமதை விரைந்துசெய்வோம்
வீரத் தமிழரென்று பேருமெய்துவோம்
நித்முங் கலப்புமணச் செய்திகள் கேட்டு
நெஞ்சம் மலர்ந்துவுடல் விம்மிமகிழ்வோம் (சாதி)

12. சாமியைத் தொழுவதானல் தரகர்வைக்கோம்
சாலவும் பணத்தைக்கொண்டு கோவிலைக்கட்டோம்
பாமரர்க்குப் பகுத்தறிவை யுண்டுபண்ணுவோம்
பந்திபந்தி யாய்த்தெருவில் பள்ளிகள்வைப்போம் (சாதி)

13. ஆத்திக ரென்றுசிலர் கூட்டம்போட்டு— நம்மை
ஆனமட்டுந் திட்டிடினும் நாங்கள்மலைக்கோம்
நாத்திக! ரானநாங்கள் சொன்னவையெல்லாம்
நலந்தரு மென்றுணர்ந்தால் நாடுதற்கென்ன (சாதி)

14. சாத்திரப் பேய்களெல்லாம் நாங்களோட்டுவோம்
சாதி சமயப்பேயை நாங்களோட்டுவோம்
நேத்திரத் தாலேபார்த்தால் தீட்டென்றுசொல்லும்
நெறிகெட்ட பேய்களையும் நாங்கள்வாட்டுவோம் (சாதி)

15. பாரதத்தலைவன் ஈ. வி. ராமன்நமக்கு
பகரும் மொழிகள்பல செவிமடுப்போம்
சீரியகண் ணப்பரவர் நமக்குச்செய்யும்
சிறந்திடுந் தொண்டதனை நாங்கள்மதிப்போம் (சாதி)

---

## 3. பாப்பாப் பாட்டுகள்

(பாரதியாரின் பாப்பாப்பாட்டு மெட்டு)

1. போனதை யெண்ணாதே பாப்பா— நீ
புந்தி யழியாதே பாப்பா
வானம் இடிந்தாலும் பாப்பா— ஒரு
வரம்பு கடவாதே பாப்பா

2. பிச்சைகள் ஏற்காதே பாப்பா— நீ
பிழைபடப் பேசாதே பாப்பா
கொச்சை மனிதர் தமைக்கண்டால்— நீ
கூடிப் பழகாதே பாப்பா

3. தாயை மறந்துவிட லாமோ— நீ
தந்தையைக் காப்பாற்று பாப்பா
சேயை வளர்த்தது போல— நீ
செல்வம் வளர்த்திடு பாப்பா

4. வினைவினை யென்றுமே நீயும்— நாளை
வீணே கழிக்காதே பாப்பா
மனையின் அறங்களை யென்றும்— நீ
மறந்தும் அலையாதே பாப்பா

5. பலபல தொழில்களை யோர்ந்து— நல்ல
பலந்தரும் ஒன்றுசெய் பாப்பா
சலசல வென்றுமே பொருள்கள்— நம்மைச்
சார்ந்துமே வந்திடும் பாப்பா

6. வள்ளுவர் நூலதைப் பாப்பா— நீ
வாசித் துணர்ந்திடு பாப்பா
தெள்ளிய அறிவுமே பெருகும்— நீ
சிறந்து விளங்குவாய் பாப்பா

7. சாதி யெழுதிப் பிரித்த— கொடுஞ்
சாத்திரங் கற்காதே பாப்பா
வீதியிற் சென்றால் தடுக்கும்— அந்த
வீணரை மதியாதே பாப்பா

8. நாட்டை யிழந்தோம்நாம் பாப்பா— நல்ல
நாகரிக மற்றோமே பாப்பா
வீட்டுடன் சொர்க்கமதை யெண்ணி— நாம்
வேணாது பேசினோம் பாப்பா

9. காட்டை யுழுதிடு பாப்பா— நல்ல
கைத்தொழில் செய்திடு பாப்பா
நாட்டினைக் காப்பதற் கிஃது— ஒரு
நல்ல வழியாகும் பாப்பா

10. பேதைமக் கள்சிலர் சேர்ந்து— நம்மைப்
பிழைபடப் பேசுறார் பாப்பா
வாதங் கொடுத்தேநா மவர்க்கு— நல்ல
வழியை யுணர்த்துவோம் பாப்பா

11. இனிமையாய்ப் பேசிடு பாப்பா— உனக்
கேற்ற துடனேசெய் பாப்பா
சனிபுத னென்றுமே சொல்லி— நாளைத்
தள்ளிக் கடத்தாதே பாப்பா

12. தமிழர் முதற்பலர் யாரும்— ஒரு
தாயின் புதல்வரே பாப்பா
அமிழ்தினு மினியநம் தமிழை— நீ
ஆதரிப்பாயென்றும் பாப்பா

13. குடும்பத்தைப் போற்றிடு பாப்பா— உயர்
கொள்கையிற் சேர்ந்திடு பாப்பா
கடந்ததை யெண்ணியே நீயும்— மனக்
கஷ்ட மடையாதே பாப்பா

14. சுயமரி யாதையை நமக்கு— மிகத்
தோற்றுவித் தோர்களின் பாப்பா
நயவழி நோக்கினே மாகில்— நம்மை
நாகரிக மாக்கிவிடும் பாப்பா

---

## 4. மக்களை அழைத்தல்

(நொண்டிச்சிந்து)

1. வருவீர் சோதரரே— நாம்
வாழ்வோம் சுயமரி யாதையுடன்
பெருமிதஞ் சுதந்திரமும்— புகழ்
பெற்றிடு வீர்நிலை யுற்றிடுவீர்

குருவென மடையர்களை— நம்பும்
குருட்டு வழக்கமதைப் போக்குதற்கு
பருவ மிதுவாகும்— நம்
பாரதத் தலைவனீவி ராமனருகில் (வரு)

2. பாலதை யருந்துகின்ற— பெண்ணின்
பாகுபா டறியாத பாலர்களை
சிலர்கள் நாமென்று— சொல்லித்
திரிகின்ற மூடர்களோர் கிழவனுக்கு
மாலைக ளிடுகின்றார்— அந்த
மாகிழ வன்பின்னால் இறந்துவிட்டால்
கோலத்தைக் குறைக்குகின்றார்— பெண்ணைக்
குருடரெல் லாமிந்தக் கொடுமைநீங்க (வரு)

3. கணக்கற்ற பொருள்களையே— நம்மில்
கலியாண மென்றுசிலர் அழித்துவிட்டுப்
பணக்கஷ்டம் பெரிதாகிச்—சிலர்
பாப்பர்வின் ணப்பந்தருஞ் செய்தியறிவீர்
குணஞ்செய லறியாது— கோசாக்
குகையி லிருந்தபெண்ணைக் கூட்டிவைத்து
மணமற்ற வாழ்க்கையினால்— தம்பதிகள்
வாடித் தவிப்பதையும் நாமறிவோம் (வரு)

4. தந்தைதாய் உறவினர்கள்— உயிர்
தரித்திருக் கும்போது தவிக்கவிட்ட
விந்தைம னிதர்களெல்லாம்— செத்து
வீழ்ந்தபின் புஅறி யாமையினால்
தந்திடு வார்பொருளை— ஒரு
சாதி யினரைக்கூட்டித் தாழ்பணிவார்

மந்திரத் தாலுணவை— அவர்க்கு
வழங்கும் நெறிகள் தனை நாமொழிப்போம் (வரு)

5. யாவரு மொன்றென்போம்— இதில்
யாரா கினுமொருவர் வேறுபட்டால்
மேவிடோம் அவர்களண்டை— அவர்
மேலவர் என்றுபயந் திணங்கிநிற்கோம்
பாவிக ளென்றுசொல்லி— நம்மைப்
பறையடித் தாலதற்குப் பயந்துநிற்கோம்
நாவலர் என்றுசிலர்கள்— பணத்தை
நாட்டிற் பிடுங்கிடும் வழக்கமொழிப்போம் (வரு)

6. ஆலயந் தனிற்செல்லுவார்— அங்கு
ஆடவர் மகளிரைக்கண் டறிவிழப்பார்
பாலதைக் குடங்குடமாய்ச்— சிறு
பாலருக் குதவிடாது கல்லிற்பெய்குவார்
சாலவும் படித்தோமென்பார்— ஒரு
க்ஷணப்பொழு தேனுமதன் படிநடவார்
பாலரைப் பள்ளிகள்தோறும்— மூடப்
பழக்கத்தை யோதுவித்து பாவையாக்குவார் (வரு)

7. நெஞ்சி லுரம்பெறுவீர்— உயர்
நேரிய வழியதனைக் கடைப்பிடிப்பீர்
பஞ்சமும் நோயகலும்— நம்
பாரத தேசமதைக் காத்திடுவோம்
வஞ்சனை சூதறியா— உயர்
மக்களெல் லாம்வந்து கூடிடுவோம்
பஞ்சையர் செல்வரென்ற— வெறும்
பாகுபா டிலாதுவந்து கூடிடுவீர் (வரு)

8. சாதிகள் தான்பிரிக்கும்— குப்பைச்
சாத்திரங் களையெல்லாஞ் சுட்டெரித்தால்
மேதினி யுயர்வடையும்— வெறும்
மேலவர்கீ ழவரென்ற பேதமகலும்
நீதிகள் நிலைத்துவிடும்— புது
நெறிகளெல் லாமக்கள் கடைப்பிடிப்பார்
மாதர்க ளுயர்வடைவார்— சிறு
மக்களெ லாஞ்சுய மதிப்படைவார் (வரு)

---

## 5. உயர்ந்தோர் என்பவரை வினவுதல்?

(பாரதியாரின், "ஆயிரஞ் சாதிகள்" என்ற மெட்டு)

1. எந்த வகையினி லெங்களைத் தாழ்ந்தவ
ரென்றுமே சொல்லுகிறீர்?— நன்கு
சிந்தை தெளியவே நாங்க ளிதனையே
செப்புவோம் கேட்டிடுவீர்

2. முகத்தினி லேபிறந் தோமென்று சொல்கின்ற
மூட மதியினர்காள்— அது
அகத்தினி லேயருள் உற்றவர் சொல்லிடும்
ஆண்மை மொழியாமோ?

3. கல்வியைக் கற்றதில் உங்களைப் போலயாம்
கற்க வலியிலையோ?— பல
செல்வம் பெருக்கிடுங் கைத்தொழில் தன்னிலுஞ்
சென்றதென் எம்மைவிட?

4. தேசத்தைக் காத்திடச் சீவனை விட்டுச்
சிறந்தவர் நாங்களன்றோ?— பல
பாசத்தி லாழ்ந்து பதுங்கி யிருந்திட்ட
பாவியர் நீங்களன்றோ?

5. தேசத்தைக் காட்டிக் கொடுத்தவர் தம்மில்
சிறந்த தொகையினரார்?— பல
மோசக் களஞ்சிய நூல்க ளியற்றியே
மொய்ம்மை யழித்தவரார்?

6. சாதிப்பிரிவுகள் நாங்கள்செய் தோமென்று
சாற்று மறிவிலிகாள்— பல
நீதிகள் சொல்லும் மனுநெறி தன்னையும்
நீங்க ளறியீரோ?

7. பாவிகள் செய்யுங் கொடுமையி லாயிரம்
பங்கு புரியுகின்றீர்— பணந்
தாவிப் பிடிப்பதி லுங்களுக் குநிகர்
தரணியிற் றுளரோ?

8. தீண்டா தவர்களென் றெங்க ளநேகரைத்
தெருவில் வரத்தடுக்கும்— பொல்லா
ஆண்டகை யற்ற அறிவிலி காளினி
யாகுமோ வுங்கள் செயல்?

---

## 6. எந்நாட்கண்ணிகள்

1. வருணங்கள் நான்கென்று வகுத்துமதி லோர்சிலரை
பிரமமென்று தானேத்தும் பித்தொழிவ தெந்நாளோ

2. பிறப்பொக்கு மெவ்வுயிர்க்கு மென்றுபெரு நாவலர்முன்
சிறப்பாகச் சொன்னமொழி சிந்திப்ப தெந்நாளோ

3. ஒழுக்க முயர்குலமென் ருேதுகின்ற ஆப்தர்மொழி
இழுக்கல்ல வென்றுசொல்லி ஏத்துநா ளெந்நாளோ

4. பார்ப்பனரைக் கண்டெழுந்து பதறியிரு கைகூப்பும்
ஆர்ப்பாட்டக் காரர்களுக் கறிவுதிப்ப தெந்நாளோ

5. சாமிசாமி யென்று சலியாது தாம்சிலரை
நாமமிடு வோர்கள்தொகை நலிவதினி எந்நாளோ

6. தீண்டாதா ரென்றுசொல்லித் தெருவில் வரத்தடுக்கும்
ஆண்டகைமை யற்ருேர்க் கறிவுதிப்ப தெந்நாளோ

7. பார்ப்பனர்கள் செய்கின்ற பக்ஷணமே சுத்தமென்று
ஏற்பார்கள் தாமலேயா திருப்பதினி யெந்நாளோ

8. ஆலயத்தில் ஆண்டவன்பே ரால்நம்மை யேமாற்றச்
சாலஞ்செய் வஞ்சகரைத் தான்மறத்த லெந்நாளோ

9. செத்தவர்க்குப் பக்ஷணங்கள் சேர்ப்பே னெனமிரட்டிக்
கத்துங் கசடர்மொழி கடந்துநிற்ப தெந்நாளோ

10. பெற்ருேரைப் பூசிக்கப் பேதைமக்கள் தாம்சிலரை
பற்றிப் பிடுங்கிடுவோர் பந்தம்அறல் எந்நாளோ

11. ஒருகுலத்துக் கொருநீதி யோதுகின்ற நூல்கள் தன்னின்
பெரும்புழுகைத் தான்விலக்கிப் பேறுபெற லெந்நாளோ

12. சாதி களைவகுத்துத் தந்திடும் நூல்கள் தன்னைக்
காத வழியெறிந்து கலந்திருப்ப தெந்நாளோ

13. எல்லாரு மோர்குலமே எல்லாரு மோர்விலையே
எல்லாருஞ் சோதரரென் றெண்ணுவது மெந்நாளோ

14. அன்பே யெமதுமத மாருயிரே யெங்கள் தெய்வம்
இன்பமாம் இம்முறை நாம் ஏற்றும்நா ளெந்நாளோ

---

## 7. பேதசாத்திர விளக்கம்

(பாரதியாரின், "சொந்தநாட்டிற் பிறர்க்கடிமை" யென்றமெட்டு)

1. நாங்கள் யாவருஞ் சூத்திர ரென்றுமே
நாட்டினீர் பட்டஞ் சூட்டினீர்
நீங்கள் யாவரும் பிராமண ரெனநிலை
நிறுத்தினீர் வலி யுறுத்தினீர்

2. முகத்தி னிற்பிறந் தோமென்று நூல்கள்
முடித்திட்டீர் மிக நடித்திட்டீர்
சுகத்தி னுடனேயே வாழ்ந்திட நூல்கள்
தொகுத்திட்டீர் நன்கு வகுத்திட்டீர்

3. வானர ராக்ஷத ரென்றுஎம் முன்னோரை
வகுத்திட்டீர் கதை தொகுத்திட்டீர்
சானகி ராமனைத் தெய்வமென் றேபறை
சாற்றினீர் புகழ் ஏற்றினீர்

4. சாமிசா மியென்று நாங்கள் பணிந்திடச்
சாதித்தீர் நன்கு போதித்தீர்
பூமியை யாளுமெம் மரசர்கள் யாரையும்
போக்கினீர் வறுமை யாக்கினீர்

5. எங்களை நாத்திக ரென்றுவாய் கூசாமல்
ஏசினீர் புன்மை பேசினீர்
எங்கும் ஓங்கிடுஞ் சுயமரி யாதையை
யெதிர்த்திட்டீர் மிகக் குதித்திட்டீர்

6. வேத மோதநாங் கூடாதென் றேஒரு
விதிசெய்தீர் எமைச் சதிசெய்தீர்
வேத மோதி யறிந்தபின் பேசூழ்ச்சி
விளங்கிற்று மதி துலங்கிற்று

7. வலது கையினில் தீயிருக் குதென்று
வழுத்தினீர் மிக அழுத்தினீர்
சலங்கொ திக்கவுந் தீயில் லாதுமே
தாவுறீர் கடை மேவுறீர்

8. சுயமரி யாதை நெறியை யுலகுக்குச்
சொல்லுவோம் பகை வெல்லுவோம்
நியம முடனேயே வாழ நெறிகளை
நேமிப்போம் பொருள் சேமிப்போம்

9. பார்ப்ப னர்நெறி தம்மை விலக்குதல்
பாவமோ? மனஸ் தாபமோ?
ஏற்பார் தம்மைப் பணிதல்தீ மையென்ப
தீனமோ? அவ மானமோ?

10. தாயிறந் தபின்பு மோக்ஷமா ளப்பொருள்
தந்திடோம் மிக நொந்திடோம்
கோயிற் சாமியைக் கும்பி டப்பொருள்
கொடுத்திடோம் புகழ் கெடுத்திடோம்

11. பிச்சை யேற்றுப் பிழைத்திடு வீர்நீங்கள்
பெரியரோ? நாங்கள் சிறியரோ?
இச்சை யற்ற தியாகிக ளாரையும்
ஏற்றுவோம் புக ழாற்றுவோம்

---

## 8. இது செய்யிற் றோசமில்லை

பண்டாரப்பாட்டு

1. தோசமில்லை தோசமில்லை
தோசமென்ப தில்லையே
நாசமாக்குஞ் சாதிக்கட்டை
நாங்கள்வே ரறுத்திடல்
தோசமில்லை தோசமில்லை
தோசமென்ப தில்லையே
வேசைதன்னைக் கோயில்விட்டு
விரட்டுவதி னால்நமக்கு
தோசமில்லை தோசமில்லை
தோசமென்ப தில்லையே
காசை யள்ளி ஆலயத்தைக்
கட்டிடாத தால்நமக்கு

தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே
நீசரென் றுரைக்கும்நூலே
நெருப்பினிற் பொசுக்கினதால்
தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே

2. மாசடைந்த நெஞ்சினர்
மயக்கத்தைத் தவிர்ப்பதால்
தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே
ஆசையுற்ற குருக்கள்தம்மை
ஆண்டிடா தடிப்பதால்
தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே
நேசமற்ற கணவர்தம்மை
நீக்கிவிட்ட மாதர்கட்கு
தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே
தேசபக்த ரென்பவர்
சிறுமையைப் பரப்புவதால்
தோசமில்லே தோசமில்லே
தோசமென்ப தில்லேயே

---

## 9. பகுத்தறிவு

(பாரதியாரின் தேவர்வருகவென்றுசொல்வதோ" என்றமெட்டு)

1. கல்வியைக் கற்றிடல் தீமையோ?—நல்ல
கைத்தொழில் செய்வதுந் தாழ்மையோ?
செல்வம் பெருக்கிடல் வேண்டுமே—நல்ல
சித்தம் பொருந்திநாம் வாழ்குவோம்

2. அவயவ மற்றவர் தங்கட்கு—பல
ஆதரங் காட்டுதல் நன்மையே
அவமாக வந்துமே நின்றிடும்—தடியற்
கன்னம் படைத்திடல் தீமையே

3. சிவமென்று தம்மையே சொல்லுவார்
சின்னங்கள் பூண்டுவி ளங்குவார்
தவமென்றுஞ் செய்யத் துணிந்திடார்—வீணே
தடியர்கள் போலவு மலைகுவார்

4. உண்டு களிப்பது பாவமே—அறியா
ஊமைப் பிராணிகள் தம்மையே
தொண்டுகள் செய்திட வேண்டுமே—உயிர்த்
தோழரைப் போலதை யெண்ணியே

5. பாரத மக்களெல் லோருமே—இந்தப்
பாரினி லோர்சாதி யாகுமே
சீரிலாப் பார்ப்பனர் நம்முள்ளே—வேறு
செய்துமே சாதி பிரித்தனர்

6. வீதியிற் செல்லத் தடுக்கிறார்—சில
வீணர்கள் நம்முள் அநேகரை

சாதியால் வந்ததோர் கேடிது—இதைத்
தகர்த்திட வெண்ணித் துடிக்குது

7. தீண்டா தவரென்று சொல்லியே—நம்முள்
திகைக்கிறார் மாந்தர் அநேகர்கள்
மாண்டா ரறமென்று எண்ணுறார்—இம்
மயக்க மொழிப்பது நம்கடன்

8. மூடப் பழக்கத்தி னாலேயே—இது
மூளைத்த கெடுதியென் றார்சொலார்?
வாடிடும் மக்கள் சடங்குக்காப்—பொருள்
வாரி யிறைப்ப தறிந்துளோம்

9. பாலர்கள் தானேபின் னால்வரும்—நமது
பாரத தேசத்தைக் காப்பவர்
சீலர்க ளாக அவர்களை—நாம்
செய்வது நம்கடன் என்றறி

10. கூடிநாம் உண்போமெல் லாமொரு— தாயின்
குழந்தை களைப்போல வெண்ணியே
கேடுறும் வேற்றுமை கொண்டதால்—பல
கெடுதிகள் வந்துநம் முன்னிற்கும்

11. பாவலர் தாமென்று சொல்லுவார்—பல
பண்டிதத் தன்மையு முண்டென்று
கேவல மான நடக்கையால்—தினங்
கெடுதியே செய்தா ருலகினில்

12. சடங்கெனு மூடப் பழக்கத்தை—நாம்
சாக வடித்திடல் வேண்டுமே

மடமை தருமெந்தக் கொள்கையும்—உண்மை
மனிதர்கள் என்றுமே கொண்டிடார்

13. மானத்தை விற்றிடல் தீமையே—நல்ல
மனமும் உறுதியுங் கொண்டிடு
ஈனத் தொழில்தனை யேற்றிடேல்—உனக்
கேற்ற தொழிற்செய்து வாழ்ந்திடு

14. கஞ்சி மிகுந்திருந் தாலதை—ஏழைக்
கடும்பசிக் கங்கே யுதவிடு
வஞ்சம் அழுக்கா றிலாச்சொல்லை—இனிய
வாக்கினுற் சொல்லி மகிழ்ந்திடு

15. சஞ்சலங் கொள்ளுவ தாகுமோ—மனஞ்
சலிப் படைவதுந் தீமையே
பஞ்சையர் போலநா மென்றுமே—ஒரு
பாவனை காட்டுத லற்றிடு

16. ஏழை யொருவனைத் தெய்வமாய்—நாம்
எண்ணி நடத்துதல் மேன்மையே
கோழைக ளென்றும் மேலானதோர்—உயர்
கொள்கையைச் செய்து மகிழ்ந்திடார்

---

## 10. சாதிபேத விளக்கம்

### கும்மிப்பாட்டு

1. சாதிக ளாயிரந் தான்வகுத்தார்—இந்தத்
தாரணி மாந்தர் தமைக்கெடுத்தார்—இனி

மேதினி மாந்த ரிதையறிந்து—ஐக்யம்
மேவும் நெறிபற்றி வாழ்ந்திடுவோம் (சாதி)

2. ஒற்றுமை யொற்றுமை யென்றுசொல்லிப்—பலர்
ஊருகள் தோறும் உளறுகின்றார்—நல்ல
ஒற்றுமை தன்னைக் கெடுத்தவரா ரென்றுள்
ஊன்றி யறிந்திட வேண்டுகிறோம் (சாதி)

3. முகத்திற் பிறந்தவர் நாங்களென்றார்—நம்மை
முழங்காலின் கீழே பிறந்தீரென்றார்—பெருஞ்
செகத்தினி லிந்தப் புரட்டுகளைச்செப்பி
சேர்க்கை பிரித்தவர் நாங்களன்று (சாதி)

4. கூடிச் சுதந்திரம் பெற்றிடவே—நாமுங்
கூட அலைந்தோ மிவர்கள்பின்னால்—நம்மை
தேடிப் பிடித்து இழிந்தவரென்றனர்
சேரமா தேவிக் குருகுலத்தில் (சாதி)

5. சுயமரி யாதை யடைந்தபின்பே—நாம்
சுதந்திரம் பெற்றிடக் கூடுமென்றோம்—இதை
நியமம் அன்றென்று சொல்வோரின்—மன
நிலையை யென்னென்று நாமுரைப்போம் (சாதி)

6. சாதிச் சண்டை வளர்க்குகின்றா—ரெனச்
சாற்றித் திரியு மறிஞர்களே!—முனம்
நீதி யுரைத்த மனுநூலை—நிதம்
நீங்கள் படித்தும் உணர்ந்திலிரோ? (சாதி)

## 11. சுயமரியாதைப்பெருமை

(நந்தனரின், "தில்லைவெளியிலே கலந்துவிட்டாரவர்"

என்ற மெட்டு)

1. சுயமரி யாதை நெறியினர் பிறர்களைத்
தொழுதுமே வாழ்வாரோ?—என்றும்
நியம முடனேயே வாழநினைப்பார் நன்
நெறிகள் தவிர்வாரோ? (சுய)

2. சாதிக ளின்றெனுந் தன்மையுள் ளோர்பல
சாதிகள் சொல்வாரோ?—பெரும்
நீதி யறிந்த புலவர்கள் முன்மனு
நீதியைக் கொள்வாரோ? (சுய)

3. கண்டதி லெல்லாம் பொருளறி வார்கல்லைக்
கட்டி யழுவாரோ?—உயர்
பண்டித ரென்பவர் பாரத ராமனின்
பழங்கதை கொள்வாரோ? (சுய)

4. வேதத்தி லுள்ள இழிவறிந் தாற்பின்னும்
வேதத்தைக் கொள்வாரோ?—பல
சாதிக் கொருநீதி தான்வகுத் தேசெல்லுஞ்
சாத்திர மேற்பாரோ? (சுய)

5. சுதந்திரத் தோடுமே வாழ நினைப்பவர்
சுயமரி யாதையற்றால்—என்றும்
இதந்தரும் வாழ்க்கை யடைந்திடோம் நாமென்று
எண்ணவு மாட்டாரோ? (சுய)

6. பகுத்தறி வோடுமே பாரினில் வாழ்பவர்
பாமர ராவாரோ?—மேலாம்
மகிழ்ச்சி ததும்பிடும் மாந்தர்க ளொற்றுமை
மாண்பை யிழப்பாரோ? (சுய)

7. பாரினில் யாருஞ் சமமென் றுணர்ந்தவர்
பணிவரோ வோர்குலத்தை—உயர்
ஏரினுழவரைப் போற்றாமல் பிச்சையிங்
கேற்பாரைப் போற்றுவரோ? (சுய)

---

## 12. கள்ளாடிப்பு

கிளிக் கண்ணிகள்

1. தீண்டாமை போகவென்று
தெருவில் முழங்கிடுவார்
வேண்டாரே வீட்டினண்டை—கிளியே
வீணர் பறைய ரென்பார்

2. கோயிலுக்குள் சோதரரைக்
கூட்டியே போவேனென்று
வாயினால் சொல்வதல்லால்—கிளியே
வாழ்வில் நடத்தலுண்டோ?

3. கள்ளுண்ண லாகாதென்று
கண்டபடி பேசிடுவார்
கள்ளுக்காத் தென்னைகளைக்—கிளியே
கட்டுக்குத் தகைவிடுவார்

4. சுதந்திர வேட்கைகொண்டு
துள்ளிக் குதிப்பவர்கள்
இதந்தருஞ் சமத்துவத்தைக்—கிளியே
ஏற்க மறுக்குகின்றார்

5. மானமும் பகுத்தறிவும்
வன்கண்மை சிறிதுமில்லா
ஈனமுறும் வாழ்க்கைதன்னைக்—கிளியே
ஏற்காது இவ்வுலகு

6. பார்ப்பனரைக் குற்றஞ்சொல்லிப்
பறையரென் போரைத்தள்ளும்
தாற்பரிய மற்றவரைக்—கிளியே
தகுந்தவ ரென்னலாமோ?

---

## 13. கற்பனை காதற்பாட்டுக்கள்

### மாலைப் பொழுது

1. மாலைப் பொழுதினிலே
மலர்களின் வாசனையும்
சோலையெல் லாம்பறவை
சூழ்ந்தொலிக்கும் இன்னிசையும்

தென்கடலின் பாலிருந்து
தென்றலது ஓடிவந்து
அன்புடனே எவ்வுயிர்க்கும்
அடிமைசெய்யும் வேளையது

2. விண்ணகத்தே சந்திரனும்
விளங்குந் திருவழகு
மண்ணகத்தி லுள்ளோர்
மனதையும் ஈர்த்ததுவே
பொய்கையின் தன்னருகே
புந்திமகிழ் விக்குமொரு
செய்கையை நானிங்கு
செப்புவேன் கேட்டிடுவீர்

3. பார்த்திடவுந் தீண்டிடவும்
பாதைவழி சென்றிடவும்
ஏற்றிடா தின்நாள்
இருக்குங் குலத்துதித்த
பாவையொரு செம்பொன்
பதுமை யெனவாங்கே
மேவினாள் வாவி
விளித்தானோர் காவலவன்

4. யாது கருமமென?
அவ்வணங்கு தான்வினவ
சாதி யிழிந்தவள்நீ
சாராதே வாவியென்றான்
கேட்டாளம் மாது
கிலேசம் பெரிதாகி
வாட்டமுட னோரிடத்தில்
வந்துகண் ணீர்வடித்தாள்

5. பார்த்திடவுந் தீண்டிடவும்
பாதைவழி சென்றிடவும்
ஏற்ற குலத்தவனா
யிருக்குங் குமரனவன்
சுயமரி யாதைநெறி
சூழ்ந்திடும் பேரறிஞன்
வயப்பட்டான் மாதின்
வலையிலண்டை வந்துநின்றான்

6. பெண்ணரசே! நீயார்?
பேரழகி யேவுனது
வண்ண மணிமுகத்தின்
வளங்குறைந்து நின்றதென்ன?
என்னவுமே அம்மாது
இனிய மொழியாலே
சொன்னாள் விபரம்
துயரறப்பா யென்றுரைத்தாள்

7. சாதி யிழிவைத்
தகர்க்கிறேன் என்றெழுந்து
மாதரசே யென்னை
மாலை யிடுகவென்றான்
பெண்ணரசி சம்மதிக்கப்
பெருகினார் காதலிலே
எண்ணரிய சடங்குகளை
யிழித்து மண முடித்தார்

8. பார்த்திடவுந் தீண்டிடவும்
பாதைவழி சென்றிடவும்
ஏற்ற குலத்தவராய்
இருக்கிறார் தம்பதிகள்
பார்த்தோம் மகிழ்ந்தோம்
பாட்டிசைத்தோம் நாட்டினுக்காக்
கூர்த்தமதி யாரெம்முடன்
கூடுவா ரென்றறிவோம்

---

## 14. மாதர்கள்

(பாரதியாரின், "வீரத்திருவிழிப்பார்வையும்" என்றமெட்டு)

1. மாதரைக் கண்ட பொழுதிலே—நாம்
மகிழ்ச்சி ததும்புவோம் நெஞ்சிலே—அந்த
மாதரின் அன்பால் வளர்ந்ததை—என்றும்
மறந்திலை யாதுமே வாழ்துவோம்—அருந்
தீதில் தியாகம் புரிந்தவர்—நம்
சிந்தையைக் கொள்ளவும் வல்லவர்—அவர்
மேதகு வெண்ணம் படைத்ததால்—நம்மை
மேன்மை யுறவே வளர்த்தனர்

2. பெண்ணைச் சமமாய் நடத்துவோம்—புகழ்ப்
பேறும் பெருமையிங்குற்றிட—இரு
கண்ணினு மேலான கல்வியை—அவர்
கற்கும் படிக்குநாம் செய்குவோம்—பொய்பிற்

பண்ணிய சாத்திர மார்க்கத்தால்—சிறு
பாலகி தன்னை மணந்திடோம்—தோன்றும்
விண்ணிடை மீன்களைப் போலவே—நாம்
விதவை பெருக்க விடோமினி

3. தேவடி யாளென்று பேரிட்டோம்—பல
தீமை புரிய வழியிட்டோம்—பெருங்
கோவில்கள் தோறு மவர்களைப்—பல
கூத்துக ளாட்டிக் களித்திட்டோம்—அங்கு
மேவிடும் பக்தர்கள் கெட்டனர்—அந்த
மெல்லியர் மேலாசைப் பட்டனர்—பெண்ணைப்
பாவிய ரென்றுநாம் சொல்லினோம்—அந்தப்
பாதை யின்றுவரை தூர்த்திலோம்

4. விதவைக ளென்றுநற் பெண்களை—நாம்
வேண கொடுமைகள் செய்கிறோம்—அவர்
சதமென் றிருக்கிறார் நம்மையே—மனம்
சாந்தி பெறவே யுழைத்திடு—பல
விதவித மான புடவையும்—நகை
வேண தணிகிறார் மற்றவர்—இவர்
நிதமுங் கவலையில் ஆழ்கிறார்—என்று
நீந்துவ ரோதுயர்க் கடல்தனை

5. மாட்டைக் கொண்டது போலவே—பல
மாதரைக் கொள்ள நினைக்கிறோம்—ஓர்
நாட்ட முடையவோர் பெண்ணையே—நாம்
நாயகி யாகவே கொள்ளுவோம்—அவர்
தேட்ட மறியாத அன்புளோர்—நாம்

தேட அறியாத் தியாகிகள்—இன்பங்
கூட்ட நினைத்தால் நினைப்பரே—சிறு
குறைகள் புரியவும் எண்ணிடார்

6. காதல் பெருகிய மாதரின்—கடைக்
கண்ணின் பணியினு லாடவர்—தான்
சாதல் மறந்துமே விண்ணிடை—தினஞ்
சாட நினைக்கவுஞ் செய்குவார்—தெய்வ
மாதரைத் தூஷணை செய்தனர்—முன்னம்
மடமைப் புலவர்க ளிற்சிலர்—பல
தீதுரை செய்து களித்தனர்—கல்விச்
செல்வ மளிக்கவும் மறுத்தனர்

7. வீட்டி லடைத்துமே வைத்தனர்—அடிமை
வேலைகள் செய்யவும் வைத்தனர்—சிறு
கூட்டுக் குருவியைப் போலவும்—பல
கொடிய சிறையி லடைத்தனர்—அடற்
காட்டிற் றிரியும் விலங்கென—கொடுங்
காலிகள் போல நடத்தினர்—நல்ல
ஏட்டைத் தொடவும் மறுத்தனர் இன்னும்
என்ன கொடுமை செயவிட்டார்

## 15. அண்ணன் பாட்டுக்கள்

1. பாரத ரிற்சிலரை—அண்ணே
பங்கப் படுத்தாதே
வீர முனக்குண்டேல்—அவரை
விமல ராக்கிடுவாய்

2. காசி சென்றாலும்—அண்ணே
கங்கையில் மூழ்கினுமே
மாசு நெஞ்சினர்க்கே—அண்ணே
மயக்கந் தீர்ந்திடுமோ?

3. பண்டு பண்டென்றே—அண்ணே
பாரத ரிற்சிலர்கள்
கொண்டு திரிகின்றார்—நம்மைக்
குருட ராக்குகின்றார்

4. செத்தவர் தங்களுக்கே—அன்னம்
சேர்ப்பே னென்குகிறார்
உத்தம அண்ணனே நீ—இதன்
உண்மை யறிந்திடுவாய்

5. ஊருகள் தோறம்பலர்—அண்ணே
உயர்ந்த மனிதரென்று
சீரை யழிக்குகின்றார்—விபூதி
தீர்த்த முதற்கொடென்று

6. சாதிக் குருக்களென்றே—தம்மைச்
சார்ந்த வரைக்கூட்டி
ஏது மறியார்பால்—அண்ணே
யேய்த்துப் பிடுங்குகின்றார்

7. சங்கர ரென்றசொல்லும்—ஒரு
சாதிக் குருவின்பால்
பங்க மடையாதே—பணத்தை
பாதத்திற் கொட்டாதே

8. தம்பி ரான்மடத்தார்—உயர்ந்த
சாதியா ரென்பவரை
எம்பி ரானென்றே—அண்ணே
யேத்துதல் போக்கிவிடு

9. திருநா ளென்றசொல்லிப்—பெருந்
தேரை யிழுத்திழுத்து
வருவா யத்தனையும்—அண்ணே
வாரி வழங்கிவிட்டோம்

10. தேச பக்தரெனும்—அண்ணே
சீரியர் பேராலே
காசைப் பறிக்குகின்றார்—அண்ணே
கண்டதைப் பேசுகின்றார்

11. பள்ளர் பறையரென்றே—அண்ணே
பாவித்து நோக்கார்கள்
வள்ளுவர் நூலதையே—அண்ணே
வாசித் துணர்ந்தவர்கள்

12\. சடங்கு செய்தலுத்தோம்—அண்ணே
சாதி பிரித்தலுத்தோம்
மடங்கள் கட்டிவைத்தோம்—சோம்பல்
மக்கள் பெருகவைத்தோம்

13\. சத்திரங் கட்டிவைத்தே—ஒரு
சாதிக் குணவளிக்கும்
புத்தியில் லாத்தருமம்—அண்ணே
போக்கிட வேண்டுமேநாம்

14\. கண்ணுள மென்றுசொல்லி—அண்ணே
கணக்கில் லாப்பொருளை
மண்மீது கொட்டிவிட்டோம்—பின்னால்
மதிக லங்கிநின்றோம்

15\. பள்ளத்துத் தண்ணீரெல்லாம்—அண்ணே
பாவத்தைத் தீர்க்குமென்று
எள்ளத் தனைபுத்தி—அண்ணே
யிருப்பவர் சொல்லாரே

16\. வஞ்சனை பில்லியென்று—அண்ணே
வாழு மனிதர்பலர்
நெஞ்சம் உடையுகின்றார்—அண்ணே
நிறைந்த கல்வியின்றி

17\. யாத்திரை யென்றுசொல்லி—பணம்
அள்ளிச் செலவழித்தோம்
ஆத்தி ரம்போச்சோ?—நமக்
கறிவு வந்ததுண்டோ?

18. பாரத தேசமதிற்—பார்ப்பார்
பறைய ரென்றுசொல்லும்
நாரதர் தோன்றியதால்—அண்ணே
நாமும் பிரிந்துவிட்டோம்

19. ஆட்டி றைச்சியுண்டார்—அண்ணே
யாகத்தின் பேராலே
மாட்டி றைச்சியுண்டார்—லண்டன்
மாநகர்ப் பூதேவர்

20. சாதி பிறமாப்பால்—அண்ணே
தலைவிரித் தாடாதே
ஆதியில் நாமெல்லாம்—ஓர்
அன்னையின் பாலரண்ணே

21. சாலையுண் டாக்கிவைத்தோம்—கோவில்
சத்திரங் கட்டிவைத்தோம்
சோலைகள் சூழவைத்தும்—அண்ணே
சுயமதிப் பற்றுவிட்டோம்

22. மதத்தின் பேராலே—அண்ணே
மக்கள் படும்பாட்டை
நிதமும் நாங்கள் கண்டே—இந்த
நீதி யுரைக்கவந்தோம்

23. கோயிலுக் குள்ளேசிலர்—அண்ணே
குருக்க ளென்றுசொல்லி
வாயில்லா மக்களின்பால்—அண்ணே
வழிப்பறி செய்யுகின்றார்

24. சாமியின் பேராலே—அண்ணே
சமைத்த கல்லருகில்
நாமுந்தச் சென்றதினுல்—அது
நாச மாகிடுமாம்

25. கோயில் கட்டிவைத்தோம்—குளங்
கோபுரங் கட்டிவைத்தோம்
நாயுஞ் சென்றிடலாம்—அங்கே
நாம்செல்ல லாகாதாம்

26. சாதிக் கொருநீதி—அண்ணே
சாற்றும் மனுநூலை
நீதி நெறிப்படியே—அண்ணே
நெருப்பி லிடத்தகுமே

27. பிறப்பில் வேற்றுமைகள்—அண்ணே
பேசுதல் கூடாது
சிறப்பு வெவ்வேறு—ஒவ்வோர்
செய்கை யால்வருமே

28. சடங் கெனும்பேயை—அண்ணே
சாக அடித்திடுவோம்
மடமை நீங்கிடுவோம்—எல்லா
மதமும் ஒன்றென்போம்

# 16. தம்பி பாட்டுக்கள்

1. கள்ளை யருந்தாதே—தம்பி
கண்டதைப் பேசாதே
கள்ளப் புணர்ச்சிதனைத்—தம்பி
கனவிலுங் கருதாதே

2. பொருள் மிகுந்திருந்தால்—தம்பி
புதைய லெடுத்திருந்தால்
அருள் நெறிகளுக்கே—தம்பி
அன்புட னேயுதவு

3. பிள்ளையைப் பெற்றதினால்—தம்பி
பெருமை யாகிடுமோ
கள்ள மறியாத—தம்பி
காளைய ராக்கிடுவாய்

4. அனைத்து யிர்களுக்கும்—தம்பி
ஆதரங் காட்டுவையே
மனத்துள் பேதங்கொண்டு—தம்பி
மயங்கித் திரியாதே

5. காலை யெழுந்தவுடன்—தம்பி
கடமையைப் போற்றியபின்
மேலே விளைவறிந்து—தம்பி
வேணது செய்திடுவாய்

6. கலை முழுவதையுந்— தம்பி
கற்ற றிந்துவிடு
சிலவ ணக்கத்திற்காப்—பொருளைச்
செலவ ழிக்காதே

7. பாலை யருந்திடுவாய்—உணவைப்
பசித்த பின்னுண்ணு
வேலை செய்திடுவாய்—சும்மா
வீற்றி ருக்காதே

8. உத்தம முன்னோரை— தம்பி
உள்ளபோ தேத்தாமல்
செத்த பிற்பாடு—கருமஞ்
செய்து பயனென்ன

9. இதிகாச புராணமதில்— தம்பி
எழுதி யிருப்பதெல்லாம்
மதிய ழித்துவிடும்—நம்மை
மாக்க ளாக்கிவிடும்

10. நாட்டுத் தொழிலனைத்தும்— தம்பி
நாமிங் காதரிப்போம்
வீட்டி லிருந்துகொண்டு—தொழில்
வேணது செய்திடுவோம்

11. சிக்கன மாய்வாழு— தம்பி
செலவைச் சுருக்கிடுவாய்
தக்க பொருளுடையோர்— தம்பி
தாழ்ச்சி யடையார்கள்

12. ஒழுக்க மொழிகள் நம்மை—தம்பி
உயர்த்து மென்றறிவாய்
வழுக்கி யும்பிறரைத்—தம்பி
வசைமொழி கூறுதே

13. தெய்வத்தின் பேராலே—தம்பி
சிதைத்தோம் பல்லுயிரை
உய்நெறி காண்பதற்கு—தம்பி
உயிர்த்திர ளோம்பிடுவாய்

14. எண்ண ருஞ்பொருளை—தம்பி
ஈன்ற நம்நாட்டைக்
கண்ணிமை போலவுமே—தம்பி
காத்திடல் வேண்டுமென்றே

15. தாயுஞ் சீதையென்பார்—தம்பி
தந்தைஇ ராமனென்பார்
பாய்குவேன் தீயிலென்பார்—தம்பி
பாமர ரையேய்க்க

16. வாழ்வு நில்லாது—தம்பி
வறுமை தங்காது
தாழ்வு வந்தாலும்—தம்பி
தகைமை விற்காதே

---

## 17. மக்களின் துயிலெழுச்சி

1. பாரினில் யாருஞ் சமமென் றுணரப்
பார்ப்பன ரல்லாத கக்ஷியை முன்னாள்
சீரியர் நாயர் தியாகர் பனகால்
செழிப்புறச் செய்துமே திகழ்ந்து மறைந்தார்
மேரென ஏராம சாமிசர்க் கரையும்
மேலான ஆரியா ராஜன் முதலோர்
நேரேவந் துதுயில் நீங்குதி யென்றார்
நிலையுணர் மக்களே! நீர்துயி லெழுவீர்!

2. சாதிகள் போகச் சடங்குகள் மடியச்
சமத்துவம் யாங்கணு மோங்கி வளர
மாதரை ஏற்றிட மக்களைப் போற்ற
மடமை தருமெந்தக் கொள்கையுந் தூற்ற
நீதி யறிந்து அதன்படி நிற்கும்
நிலையுணர் மக்களாப் பாரதராகக்
காதல் பெருகக் கபட மொழியக்
கடமையைச் செய்திடக் கண்துயிலெழுவீர்!

3. சாத்திரந் திருந்தச் சகுண மறையச்
சண்டாள ரென்கின்ற பேர்மறைந் தோட
ஆத்திரம் போகிட ஆண்மை யுண்டாக
அறிவெனு மேடையி லருளுடன் நிற்கப்
பாத்திரம் அறிந்துமே யிட்டு மகிழப்
பார்ப்பனர் நெறிகளைப் பாரதர் விரட்ட

காத்திட மானத்தைக் கவலை தொலையக்
கடமையைச் செய்திடக் கண்துயி லெழுவீர்!

4. மதமெனுங் காட்டை எரித்தெரு வாக்க
மடமை யெனும்விலங் கில்லாது போக்க
நிதமுநம் மக்களை அரித்துப் பிடுங்கும்
நிலையிலாப் புரோகிதந் தனைப்பொடி யாக்கச்
சதமென் றிருப்பவர் தங்களைத் தீண்டாச்
சக்கிலி யென்றுமே சாற்றுதல் போக்கக்
கதிபெறு வழிமனக் கண்ணினுல் நோக்கக்
கடமையைச் செய்திடக் கண்துயி லெழுவீர்!

---

## சுயமரியாதை இயக்கத்தலைவர் ஸ்ரீமான், ஈ. வி. இராமசாமிப் பெரியார் வாழ்த்து.

தெம்பாங்கு மெட்டு

1. ஈரோடு மாநகரில் ஏழையர்க் காப்பிறந்து
பாரோர் களுக்குயர்ந்த பகுத்தறிவை யுண்டுபண்ணும்
பாக்கியன் ராமன்—இன்பந்
தேக்கிடும் பூமன் (ஈரோ)

2. காந்தியுல குக்குரைத்த கட்டளையைத் தான்மதித்துச்
சாந்தமுடன் மக்கள்மனந் தான்பதிய ஓதுவித்த
சாந்தகுபேரன்—பொருள்
வாய்ந்த வுதாரன்

3. வைக்கந் தெருவதனில் வரமுடியா ஈழுவர்க்குத்
தக்கமுறை யாலவர்க்குத் தந்தார் தெருவுரிமை
தகைமைச் சொல்தீரன்—துன்பப்
பகைமை வெல்தீரன் (ஈரோ)

4. பார்ப்பனர்கள் செய்யுகின்ற படுமோசந் தனையறிந்து
காப்பேன்மற் றோரையென்று கடமையைக் கருத்தில்
கருணை கொண்டவன்—மன [வைத்த
இருளை வென்றவன் (ஈரோ)

5. குருட்டுப் பழக்கமதைக் குவலயத்தி லேவிரட்டக்
"குடியரசு"ப் பத்திரிகை குவலயமெல் லாம்பரப்புங்
குண மிகுந்தவன்—எங்கள்
மன முகந்தவன் (ஈரோ)

6. நாகம்மை யென்னுமொரு நல்மனைவி வாய்த்ததினால்
வாகுட னேநமக்கு வரவழைத்தார் சுயமதிப்பை
வழங்கிடும் பூமான்—புகழ்
துலங்கிடுஞ் சீமான் (ஈரோ)

7. கண்ணப்பர் தண்டபாணி கைவல்யர் கருப்பையாவுந்
திண்ணமுறுஞ் சௌந்தரபாண்டியன் சிறந்தலிங்கம்
சேர்க்கை கொண்டனன்—வெற்றி[ராமச்சந்திரன்
மார்க்கங் கண்டனன் (ஈரோ)

8. சந்திர சேகரரும் சாமி சிதம்பரனார்
சிந்தைதெளி லோகநாதன் சிறந்த முருகப்பாவின்
சேர்க்கை கொண்டனன்—வெற்றி
மார்க்கங் கண்டனன் (ஈரோ)

9. குருசாமி ராமநாதன் குஞ்சிதம் பொன்னம்பலம்
திருவாளர் அழகர்சாமி திகழ்விஸ்வ நாதனொடு
சேர்க்கை கொண்டனன்—வெற்றி
மார்க்கங் கண்டனன் (ஈரோ)

10. ஆர்கே-சண் முகஞ்சின்னையா அறிவுடைய ராமாமிர்தம்
தீர்க்கமுறும் அய்யாமுத்து தெளிவுறுஞ் சிதம்பரத்தின்
சேர்க்கை கொண்டனன்—வெற்றி
மார்க்கங் கண்டனன் (ஈரோ)

---

## 19. அறநெறித் திரட்டு

அறிவை யடைதல்நன் னெறிகளில் முதலாம்
ஆக்க மதனைச் சீக்கிரந் தேடு
இல்லாள் தன்னின் புல்லறி வகற்று
ஈசன் யாரெனி னேசமா றுயிர்களே
உண்மை யுடையோர் திண்மையடைவார்
ஊனமுடையரை ஈனமென் றிகழேல்
எப்பொழு தேனுந் தப்பிதஞ் செய்யேல்
ஏற்பா ரறிந்து வார்ப்பது கடமை
ஐயம் நீங்கின் மெய்யறி வுண்டாம்
ஒருவ ரேகலின் இருவர் நலமாம்
ஓதுதல் தன்னைச் சாதன மாய்க்கொள்
ஔவை போலுநீ செவ்வை யாய்க்கல்
அஃகு மறிவார் வெஃகுதல் செய்யார்
கற்றில னாயினும் பெற்றிய றுறவுகொள்

சத்திய முடையோர் நித்திய மடைவார்
ஞமலி கொள்வோர் அமளி செய்வார்
தன்னை மதியார் பின்னற் செல்லேல்
நயனுடை யான்பொருள் பயன்படு முலகில்
பண்டு பண்டெனக் கொண்டு திரியேல்
மலர்தலுங் குவிதலும் நலந்தலை யார்க்கில்
யந்திரஞ் செய்திட முந்திடு நீயே
வல்லார் சபைமுன் சொல்லத் திரங்கொள்
கடமை செய்யத் திடம்பெறு வாய்நீ
காலன் வரினுஞ் சீலந் தவறேல்
கிட்டிய பொருள்தனைச் செட்டாய்ச் செலவிடு
கீழோ ரென்பவர் கோழைய ராவர்
குறிப்பறிந் துரைபவன் சிறப்புடை யோனும்
கூழை யாகினும் ஏழையர்க் குதவிடு
கெடுவ துண்மை நடுநிலை யில்லோன்
கேட்டை நினைந்தோர் ஓட்டை யெடுப்பார்
கைக்கச் சொல்பவர் தக்க நண்பர்
கொல்லா அறமுன் நில்லா வேறறம்
கோரிய கருமஞ் சீர்பெற நடத்து
கௌத்துவ காரன் தௌத்திய மென்னும்
சற்சன ருறவை நிச்சயந் தேடு
சாந்த மென்பது மாந்தற் கழகு
சினங்கொண் டோரின் மனநன் றெண்ணு
சீரிய ரல்லார் பாரில் சுமையே
சுயமதிப் புடையோர் நயம்பட வாழ்வார்
சூழு மக்களிற் பாழும் பிரிவேன்

சென்றதைக் கருதுதல்நன் றுமாகா
சேயர்க டன்னைத் தூயவ ராக்கு
சைத்திய முடையோர் வைத்திய ருழுநிலம்
சொல்லுவா ரறநெறி நில்லா ரவ்வழி
சோக முடையவன் வாகிழந் திடுவான்
சௌரிய மற்றவன் பௌசெதற் காகும்
ஞயம்பெற வாழ்வார் பயன்பெறு மனிதர்
ஞானமுடையோ ரீன மடையார்
ஞெகிழ்த லுடையோர் மகிழ்த லடையார்
ஞொள்குத லென்றும் கொள்கையர் செய்யார்
தந்தை தாய்குருவை சிந்தையில் வைத்திடு
தாயிடஞ் செய்ததைச் சேயிடம் பெறுவோம்
தினமொரு தரமெனும் மனமதை யடக்கு
தீயர்க ளோடு நேயங் கொள்ளேல்
துன்பஞ் சகிப்போ ரின்ப மடைவார்
தூயர்கள் தங்களை நேயர்க ளாக்கிடு
தெளிவி லார்தொழி லிழிவுண் டாக்கிடும்
தேசஞ் செழிக்க ஆசைப் படுநீ
தையலர் நமக்கு மெய்யுடைத் துணைவர்
தொழிலாளர் தம்மை எழில்பெறச் செய்திடு
தோழரிற் சிலரை ஏழையென் றிகழேல்
தௌவை சூழ்ந்தோர் தௌவ லடைவார்
நன்றி மறப்பவ ரென்று முய்யார்
நானெனும் பெற்றியை யேன்கொள லாகா?
நிலையிலா மக்கள் அலைகடற் றுரும்பே
நீதமுள் ளவரெலாஞ் சோதிய ராகும்

நுண்ணிய நூல்தனை யெண்ணித் தெரிந்திடு
நூற்ற லென்று மேற்ற தொழிலாம்
நெருங்கின ராயினு மருங்கொடு தீர்ப்புரை
நேற்றர சின்று மாற்றார் வசமாம்
நையச் சொல்லுதல் மெய்யற மன்று
நொந்தவர் தங்களைத் தொந்தரை செய்யேல்
நோக்கத் துடையோர் ஆக்கத் துறைவிடம்
பற்றுவோ மென்றும் பற்றற் றோர்களை
பார்ப்பனர் நெறியினை ஏற்பது இழிவு
பிறப்பி லெவருஞ் சிறப்பின ராகார்
பீடை யுன்மேல் சாடா தகற்றிடு
புத்தர் கொள்கை யுத்தம மானதே
பூவை யொருத்தியை மேவியே வாழ்ந்திடு
பெரும்பய னெய்திட அருந்தொழில் செய்திடு
பேயர சாட்சியில் சேய்தினுஞ் சாத்திரம்
பைப்பொருள் நிறைய மெய்ப்பொருள் காப்பாய்
பொய்த்திடில் வானஞ் செத்திடு முலகு
போர்த்தலஞ் செல்லின் மார்த்தழும் பஞ்சேல்
பௌத்திரர் களிலொரு பௌத்தர் முதல்வர்
மன கன்ர்மருக் நன்னெறி தாங்குதல்
மாதரை யென்றுந் தீதுரை யாதே
மிகுதி யுண்வைத் தகுதியா ருண்ணார்
மீறிய சினத்தைச் சீரியர் கொள்ளார்
முன்னவர் நெறியெலாம் பின்னவர்க் காமோ?
மூத்தவர் மொழியெலாஞ் சாத்திர மாமோ?
மெத்தக் கற்றவர் சுத்தமாய்ச் செப்புவார்

மேதைக ளோடுநற் சாதையும் போற்றிடு
மைவிழி யார்க்கு மெய்நெறி காட்டிடு
மொய்குழ லார்நஞ் செய்தவத் துணைவர்
மோக முடையோர் சோக மடைவார்
மௌனிய ரெல்லாம் மௌனிய ரன்று
யமனினுங் கொடியது தமகுண மாகும்
யாகாவா ராயினும் நாகாத் திடல்நலம்
இசையுந் தொழிலை வசையி லாதுசெய்
ஈகை யுடையோர் வாகை யடைவார்
யுத்தி யுடையோர் சித்தி யடைவார்
யூக மற்றோர் வாகை யற்றார்
எப்பொரு ளாயினும் அப்பொரு ளுண்மைகொள்
ஏனை யோர்நந் தானைய ராமோ?
ஐயை நாடுவோர் மெய்யை யடைவார்
ஒருமை யுடையோர் பெருமை யடைவார்
யோகஞ் செய்பவர் பாக மடைவார்
யௌவனம் போகுமுன் பௌவிய னாகிடு
வழங்குதற் கஞ்சார் கலங்கமில் லறிவோர்
வாழ்வில் செறுக்கில் தாழ்வுட னெய்தும்
வில்வலி தன்னிலுஞ் சொல்வலி மேலாம்
வீரியம் பேசுதல் சீரியற் கழகோ?
உழுவார் பின்சென் றெழுவார் உலகினர்
ஊமை போலிருந் தாமைபோ லடக்கு
வெற்றியுந் தோல்வியும் பற்றிநில் லாதே
வேலை செய்வதே சாலவும் நன்று

வையஞ் செழிக்கச் செய்திடு கருமம்
ஒல்லும் வகையில் நல்லது செய்திடு
ஓரஞ் சொல்லார் ஈர நெஞ்சினர்,
வௌவால் போல்பவர் பௌவிய ரன்று

---

## 20. கள்ளுண்ணாமை

1. அருள்நெறி தன்னிற்செல்ல அன்பதைப் படைத்திட் டோரும்
தெருளரின் சகவாசத்தால் தெளிவுறு மறிவினோரும்
பொருள்தனைக் கொடுத்துவாங்கிப் புன்மைசேர் கள்ளை யுண்ணில்
இருள்மதி யடைவதோடு இயற்கையின் இன்பங்காணார்

2. கள்ளதைக்காமுற்றோர்கள் கடமையைக்கருதமாட்டார்
தெள்ளிய அறிவிழப்பார் சீருறு மாண்பிழப்பார்
கள்ளமுங் கபடுமான கானகந் தன்னிற்செல்வார்
எள்ளியே நகைக்கமாந்தர் இடர்க்கடல் மூழ்குவாரே

3. திருவதை யிழப்பார்தன்னைச் சேர்ந்திடுங் கள்ளினாலே
உருவதை யிழப்பார்கள்ளால் உற்றிடும் நோயினாலே
மருவிய புகழினோடு மைந்தரை யிழப்பார்கள்ளால்
கருமமே கண்ணதான காதலி தனையிழப்பார்

4. சண்டாள ரருந்துகின்ற சாராயத் தோடுகள்ளை
உண்டிடும் போதுமுன்னாள் ஒண்டவத் தாலேயீன்றாள்
கண்டிடு வாளேயாகில் காரியே யுமிழ்வதோடு
அண்டிடு வார்கள்யாரும் அருகினில் வரவிரும்பார்

5. பஞ்சமா பாவமென்று பகர்ந்திடுங் கள்ளுதன்னை
நெஞ்சினி லீரமில்லா நீசர்க ளோடுசேர்ந்து
தஞ்சமென் றடைந்தவுன்றன் தாரமும் தனையரோடு
கஞ்சியைக் குடித்திடாமல் காலையில் குடிப்பதேனோ?

6. மக்களும் பசியால்வாட மனைவியும் துயரில்மூழ்க
தக்கதோர் தந்தைதாய்கள் தாங்கிடாப் பசியில்வாட
ஒக்கலும் உறவினோரும் ஓம்பிடா துனைவிடுக்க
எக்களிப் போடுகள்ளை என்பெற அருந்துகின்றீர்?

7. பொன்னிகர் மாதர்தானும் பொருளில ரென்றுதூற்ற
துன்னிய அறிவினோர்கள் துச்சமென் றுனைவிடுக்க
மன்னிய மதியைநாளும் மாற்றிடுங் கள்ளுதன்னை
சென்னியிற் றுங்கியாங்கு சீர்கெடக் குடிப்பதேனோ?

8. சாதுக்க ளென்றுசொல்லுஞ் சண்டாளர் கள்ளையுண்ணில்
பாதகஞ் செய்தேவாழும் பாவிகள் செய்கையென்னோ
போதமே குடிகொண்டோங்கும் புரையிலாப்புண்ணியோனை
ஏதமும் அற்றோனென்று ஏற்றுமே உலகம்யாவும்

9. வேதிய ரென்றுசொல்லும் வீணரே கள்ளையுண்ணில்
சாதியி லிழிந்தோரென்போர் செய்கையுஞ் சாற்றொணாதே
மேதினி யோர்கள்போற்றும் மேலவர் யாதுசெய்வார்
சோதியாமறிவினூடே தோய்ந்துமேவினைகள்செய்வார்

10. சாந்தத்தைக் கெடுக்கவல்ல சதிசெயுங் கள்ளுதன்னை
காந்திமா தவனுமின்று கதறுகிறார் விடுகவென்று
மாந்தரே விடுககள்ளை மறந்திடு மதிவல் லோரே
சார்ந்தநும் செல்வம்யாவும் சதுருடன் நிலைக்குமன்றோ

# 21. கள்ளுண்ணாமை

பாரதியாரின் "சொல்லவல்லாயோ கிளியே" என்றமெட்டு

பல்லவி

கள்ளருந்தாதே—தோழா
கள்ளை யருந்தாதே

அநுபல்லவி

வெள்ளை யாகிடுவாய்—மனம்
வேதனைப்பட்டு மயங்கிடுவாய் சொன்னேன் (கள்)

சரணங்கள்

1. தந்தை மதியாரே—பெற்ற
தாயு மதிப்பாளோ?—நல்ல
சிந்தை சிதைந்திடுந் தீவினை வந்திடும்
தெளிவுறுங் கல்வியுஞ் சேர்ந்து அழிந்திடும் (கள்)

2. பெண்டிருக் காளே—பெற்ற
பிள்ளைக ளண்டிடுமோ?—உனைக்
கண்டிடு வார்கள் காரி யுமிழுவர்
கவலை தரித்திரங் கட்டிப் பிணித்திடும் (கள்)

3. மெய் யழிந்துவிடும்—நல்ல
மேதகு வெண்ணமுண்டோ?—கொடும்
பொய்பி புகுந்திடும் போஜன மற்றிடும் [டும்
புன்மை மொழியெலாம் நன்மையாய்த் தோன்றி

4. செல்வ மழிந்துவிடும்—நல்ல
சேர்க்கை நிலைத்திடுமோ?—உயர்
பல்விதப் புகழ்கள் பாரி லிருந்தாலும்
பார்த்திட யாவும் பதுங்கி மறைந்திடும் (கள்)

5. சோதர ரைப்பிரிக்கும்—உயர்
சுயமதிப் புண்டாமோ?—நல்ல
நீதி நெறியெலாம் நின்செவி யேறிடா
நிச்சய மாகவே நீகெடு வாய்சொன்னேன் (கள்)

---

## 22. நிலாப் பாட்டு

1. நாங்கள் கலந்துவாழ வெண்ணிலாவே—ஒரு
நல்லவழி காட்டிடுவாய் வெண்ணிலாவே

2. சாதியைத் தொலைத்துவிடு வெண்ணிலாவே—எங்கள்
சாலையைத் திறந்துவிடு வெண்ணிலாவே

3. கோவிலுக்குள் நாங்கள்செல்ல வெண்ணிலாவே—ஒரு
குறுக்குவழி காட்டிடுவாய் வெண்ணிலாவே

4. பள்ளியில் படிப்பதற்கு வெண்ணிலாவே—ஒரு
பாதையைத் திறந்துவிடு வெண்ணிலாவே

5. குளத்திற் குளிப்பதற்கு வெண்ணிலாவே—ஒரு
குறிப்பை யுணர்ந்திடுவாய் வெண்ணிலாவே

6. சத்திரத்தில் தங்கவேண்டும் வெண்ணிலாவே—நாங்கள்
சாவடியில் சேரவேண்டும் வெண்ணிலாவே

7. யாவர்களு மித்திரராய் வெண்ணிலாவே—இந்த
அவனியிலே வாழவேண்டும் வெண்ணிலாவே

8. சடங்கு தொலையவேண்டும் வெண்ணிலாவே—கொடுஞ்
சாத்திரந் தொலையவேண்டும் வெண்ணிலாவே

9. மாதர் உயர்வடைய வெண்ணிலாவே—ஒரு
மார்க்க முணர்த்திடுவாய் வெண்ணிலாவே

10. பாலர் பகுத்துணர வெண்ணிலாவே—நல்ல
பாதை யளித்திடுவாய் வெண்ணிலாவே

11. உண்மை யுணர்ந்துவாழ வெண்ணிலாவே—ஒரு
உதவி புரிந்திடுவாய் வெண்ணிலாவே.

---

## 23. தீண்டாமை

பிறப்பினு லுயர்வுண்டென்று பேசிடு மனிதரெல்லாம்
மறப்பது ஞாயமென்று மாபெரி யோர்கள்சொன்னுர்
நிறத்தினு லுயர்ந்தோமென்று நினைந்திடும் அறிவிலோரின்
மறச்செய்கை போலுமீதோர் மதியிலார் செய்கையன்றே

2. திருடர்போங் கோயில்தன்னில் தீண்டாதா ரென்றுசொல்லி
வருவதைத் தடுக்குகின்ற மனிதரே! யொன்றுகேளீர்
உருவத்தில்வேறே உங்கள் ஒழுக்கத்தில் குறைந்திட்டாரோ
தருமமும் செய்யநீங்கள் தானமும் வாங்குகின்றீர்

3. ஆலயந் தன்னிற்சென்றால் அங்குறை யுங்கள்சாமி
பாலரின் வரவுகண்டு பதறியே ஓடுவாரோ
சீலரிவ் வுரைகள்தன்னைச் செப்பியே திரிவாராகில்
காலனு மவரேயாவார் காசினி யோர்களுக்கே

4. நரிகளுங் கழுதையோடு நாய்களு மலவாய்ப்பன்றி
உரிமையோ டுலாவுகின்ற உயர்வென்போர் வாசஞ்செய்யும்
தெருவினில் வரவிடாது செய்கிருர் சிலரைச்சில்லோர்
பெரியரே! ஒன்றுசேர்ந்திப் பேதமை யொழிப்பதென்ருே

5. பார்த்ததி ஞலேயந்தப் "பறையனின்" தீட்டுவந்து
சேர்த்துமே பிடித்துக்கட்டிச் சேர்ப்பிக்கும் நரகமென்று
நேத்திரத் தாலும்பார்க்க நீக்குகின் ருரேயிந்த
கூர்த்தநன் மதியில்லோரின் கொடுமையுங் கூருெண்ணுதே

6. தென்னுப்பி ரிக்காவென்னும் செல்வர்கள் வதியுநாட்டில்
துன்னிய விந்தியர்தந் துயர்தனைச் சகித்திடாதோர்
மன்னுமித் தேசத்துள்ள மாபெருந் தொகையினேரை
என்னெறி கொண்டுஇந்த இழிவது செய்கின்ருரோ

---

## 24. முறையிடல்

1. வீதிசெல்லத் தடுக்குகின்ருரே
மேலேஆடைகள் போடவுமொட்டார்
சாதிசின்னவன் போபயலென்பார்
சக்கிலியென்றுமே சாற்றுதற்கஞ்சார்
நீதிசொல்லி அதுசரியென்பார்
நீசரென்றெங்கள் நேரேயுஞ்சொல்வார்
பாதரட்சை குடைகள்பிடித்தால்
பாதகஞ்செய்தா ரென்றெமைச்சொல்வார்

2. சாவடிகளில் தங்கியறியோம்
சத்திரங்களில் சாப்பிட்டறியோம்
கோவிற்குள்ளேநாம் சென்றறியோமே
குளங்கள் தன்னிற் குளித்தறியோமே
மேவிடோமே அவர்களினண்டை
மேலேசொல்லவும் வேண்டுமோஐயா!
பாவியாங்க ளெதற்குப்பிறந்தோம்
பாரதத்திலும் வாழ்ந்திடலாமோ

3. அடிமைகொண்டெமை ஆளுகின்றாரே
ஆவிசோர அடிப்பதுமுண்டு
மிடிமைவாழ்வை யெமக்களித்தார்கள்
மேன்மைவாழ்வைத் தமக்கெடுத்தார்கள்
குடியரென்றெமைச் சொல்வதுமுண்டு
குடிப்பதில்எம்மைத் தோற்றவரன்று
படியில்நாங்கள் சுயமதிப்படைய
பாதைநீங்கள் பகர்ந்திடுவீரே

---

## 25. ஆதரவு கூறல்

(சீர்திருத்தத்தலைவர் சொன்ன மறுமொழி)
பாரதியாரின் "வில்லினை யொத்த புருவம்வளைத்தனை
என்றமெட்டு

1. வீதியிற்செல்லத் தடுக்குகின்றாரென்ப துறுதியே—அந்த
வீணர்களுக்கு மதியைவிளக்குவோஞ் சோதரா

சாதிப்பிரிவுகள் சாற்றித்திரிகின்ற மூடர்கள்—பல
சாத்திரம்பேசி வயிறுவளர்க்கிறார் சோதரா
நீதிவழியின்ன தென்று அவர்கட்குச் சோதரா—நம்
நேர்மைச்சுயமரி யாதைநெறிதனைச் சொல்லுவோம்
சோதிவிளங்கும் பகுத்தறிவோங்கிடச் செய்குவோம்-நம்மைச்
சுற்றிலும்அன்புக் குவியைமலையாய்ச் சுமத்துவோம்

2. யாருஞ்சமமெனும் உச்சநிலைதனைச் சோதரா—இந்த
அவனியிலெங்கும் நிலைபெறச்செய்குவோம் சோதரா
மேருநிகரெனத் தோன்றும்இடுக்கணைச் சோதரா—நாம்
மேவியிடித்துத் தகர்த்தெரிவோஞ்க்ஷணப் போதிலே
பாரில்வலியவர் ஏழையரைத்தின்று வாழ்கிறார்—அதைப்
பார்த்துச்சகித்திட லாகுமோசொல்லுவாய் சோதரா
சீரியர்பேர்புகழ் சொல்லிச்சுமந்து திரிகுவோம்—நிதம்
தேசஞ்செழிக்கும் வழியையேபின்பற்றிச் செல்குவோம்

---

## 26. தாலாட்டு

1. அன்புருவாய் வந்த அருமைத் திருமகன்நீ
இன்பநமக் கெய்தும்வரை இழையா துழைப்பவனே

2. மூடப் பழக்கமதை முடுக்கியடித் திப்பக்கம்
நாட விடாதுசெய்யும் நல்லமகன் நீதானே

3. மாதரு ருயர்வடையும் மார்க்க மதையாய்ந்து
தீதில்மொழி யாலுண்மை தெரிவிக்க வந்தவனே

4. தீண்டாமை போகவென்னும் தெருப்பேச்சுக் காரருக்கு
ஆண்டகைமை யாய்ச்செயலில் அறிவுறுத்தவந்தவனே

5. சுதந்திர மார்க்கமது சுயமரி யாதையென்று
இதந்தர வேமகற்கு எடுத்தோத வந்தவனே

6. தந்தையுந் தாயுஞ் சரிநிகர் மானமெனச்
சிந்தையில் மக்கள்கொள்ளச் செய்திடும் பாலகனே

7. எங்கு முளபொருட்கு இருப்பிடமேன் பூசையுமேன்
தங்கநகை யேதுக்கென்று சாற்றவந்த பாலகனே

8. செல்வம் பலசேர்த்து சிறப்பாய்ச் சமத்துவத்தை
நல்கக் கொடுத்துதவும் நன்னெறிப் பாலகனே

9. மக்களுக்குக் கல்வி வழங்குவதே தருமமென்று
திக்கெல்லாஞ் சென்று சேதிசொல்லும் பாலகனே

10. கற்று அடங்கிக் கவலையுடன் ஆராய்ந்து
மற்றவர்க்குச் சொல்லும் வகையுடைய பாலகனே

11. குப்பைப் புராணமதைக் குழிதோண்டி யேபுதைத்து
தப்பி யலைவதையும் தழல்கொண் டெரிப்பவனே

12. தொகுத்த சடங்கனைத்துந் தொலைத்துமே பாரதர்க்குப்
பகுத்தறிவைத் தான்கொழுத்தும் பாரத புத்திரனே

13. வாழ்விக்க வந்த வமுதேயென் பேரொளியே
யாழ்தோற்குஞ் சொல்லமுதை அளிக்கவந்த பேரரசே

## 27. சமத்துவப் போர்

(தாயுமானவர், "ஆனந்தக்களிப்பு" மெட்டு)

மக்கள்இழிவைநீர் பாரீர்—அதை
மாற்றச்சமத்துவப் போர்செய்யவாரீர் (மக்கள்)

1. மானம்நமக்குண்டு என்று—இந்த
மானிலத்தோர்கள் மதிக்கும்படியே
வானம்இடியினும் அஞ்சா—சாந்த
மார்க்கமுடன்வினை செய்திடவாரீர் (மக்கள்)

2. வீதியிற்சென்றிட வேண்டும்—நம்மை
விரட்டியடிக்கினும் அடங்கிடலாமோ
சாதியிழிவைக் குறிக்கும்—எந்தத்
தலத்தினுமப்படிச் சாதித்திடுவோம் (மக்கள்)

3. பார்ப்பார்பறையரென் றெண்ணும்—நல்ல
பகுத்தறிவோங்கிடப் பாரிலுழைப்போம்
தீர்ப்போம்அறியாமை தன்னைப்—பெருந்
தீரத்துடன்வெகு நேர்மையாய்ச் செய்வோம் (மக்கள்)

4. உயிரையளித்திடல் வேண்டும்—இன்றேல்
ஒத்தாசைக்காயினும் பொருளளித்திடுவோம்
பயிரைவளர்த்தது போலும்—சமத்துவப்
பசியைவளர்த்திட வாக்களித்திடுவோம் (மக்கள்)

5. பாவிடயரென்று சொல்வார்—அவன்
பாதையளித்தனன் மார்பினிலூரக்
கோவில்குளம்பள்ளி பாதை—நம்மில்
கொடுக்கமறுப்பவர் கொடும்பாவியாகும் (மக்கள்)

6. தஞ்சமடைந்திட லாமோ—மூடர்
தாளைப்பணிந்திடல் பாவமதாகும்
நெஞ்சிலுறுதியோ டென்றும்—நேரே
நிமிர்ந்துமேசமத்துவப் போர்செய்யவாரீர் (மக்கள்)

7. வெற்றுரைபேசிடல் பேதம்—வரும்
வெகுளியைஉள்ளே யடக்கிடல்நீதம்
கற்றும்பகுத்துணர் பெரியார்—அவர்
காட்டும்நெறிகளைக் கடைப்பிடித்திடுவீர் (மக்கள்)

---

## 28. அறம்வாழ்க அல்லாதனவீழ்க

1. வாழ்க ஈ. வி. ராமன்கொள்கை வாழ்கவாழ்கவே
வீழ்கப்பார்ப்ப னீயம்யாவும் வீழ்கவீழ்கவே

2. வாழ்கமுயற்சி பகுத்தறிவு வாழ்கவாழ்கவே
வீழ்கசோம்பல் மடமையாவும் வீழ்கவீழ்கவே

3. வாழ்கபொங்குஞ் சமத்துவங்கள் வாழ்கவாழ்கவே
வீழ்கமங்கும் வேற்றுமைகள் வீழ்கவீழ்கவே

வாழ்கஅன்புக் காதல்மணம் வாழ்கவாழ்கவே
வீழ்கவம்புப் பாலர்மணம் வீழ்கவீழ்கவே

வாழ்கசுதந்த்ர எண்ணம்நீடு வாழ்கவாழ்கவே
வீழ்கஅடிமை மோகம்யாவும் வீழ்கவீழ்கவே

6. வாழ்கஅந்த ணத்தன்மை வாழ்கவாழ்கவே
வீழ்கஅநி யாயத்தன்மை வீழ்கவீழ்கவே

7. வாழ்கஇந்தத் தத்வகீதம் வாழ்கவாழ்கவே
வாழ்கநீடு சுயமதிப்பு வாழ்கவாழ்கவே

---

## 29. சுதேசியம்

பிறந்துபின் வளர்ந்துவாழ்ந்து
பிள்ளையைப் பெற்றுமண்மேல்
இறந்துபின் னெடுத்துச்சென்று
எரித்திடும் வரையிற்றானும்
துறந்திலோம் அன்னியர்செய்
துணியொடு பண்டமெல்லாம்
சிறந்தநம் பாரதத்தார்
செய்தொழில் மறந்துவிட்டோம்

---

## 30. கல்வி

கல்வியால் அறிவுண்டாகுங் கருதிய கருமமாற்ற
செல்வமு மதிகரிக்குஞ் சீரிய ருறவுண்டாகும்
பல்விதப் புகழுண்டாகும் பாரத தேசந்தன்னில்
நல்வழிக் கிந்தநாட்டை நடத்திடத் திறனுண்டாமே

முன்னவர் எழுதிவைத்த மூதுரை தன்னையாய்ந்து
பின்னவ ரறியவேண்டி பேதமில் நூலையாக்கல்
சொன்னதின் படிநடத்தல் சோதர ருரிமையீதல்
நன்னெறி தன்னைச்சேர நாட்டிடுங் கல்விதானே

அந்தணத் தன்மைவாய்க்கும் அடக்கமும் அறிவுண்டாகும்
சிந்தையிற்றெளிவுண்டாக்குந் தெருளதைச்சேர்த்துவைக்கும்
புந்தியிற் புலையும்பொய்யும் போக்கியே போதம்நிற்கும்
மந்தமும் மடமைமாயும் மாசறுங் கல்வியாலே

சித்திரக் கலைகளோங்குஞ் சிறந்திடுங் கவிதைபொங்கும்
உத்தம வணிகஞ்செய்ய வுதவிடும் பயிர்செழிக்கும்
நத்திய வுயிர்கள்சுற்றம் நலம்பெற நெறிகாண்பிக்கும்
மித்திரர் குறைகள்ஆயும் மேன்மைசேர் கல்வியாலே

கைத்தொழில் பெருகுமெங்கும் கனிந்தசங் கீதமோங்கும்
மெய்த்தவ நெறிகாண்பிக்கும் மேலவ ருறவுகூட்டும்
பொய்த்திடாப் புலவராக்கும் புரையிலா மக்களாக்கும்
வத்தியங் கணிதஞ்சிற்பம் வாய்த்திடுங் கல்வியாலே

...தந்தரம் வீரம்அன்பு சுயமதிப் பதிகமாகும்
...தந்தரு மனையறத்தை யியல்புடன் செய்யத்தூண்டும்
...தமொடு அழுக்கார்சோரம் கடுமொழி காமம்சோம்பல்
...தநமை யணுகாவண்ணம் நீக்கிடுங் கல்விப்பேறே

...துநன் றறிந்துமேன்மை செறிந்திடும் பாட்டைதோன்றும்
...துய ரிடும்பைவந்தால் மனதினில் அடக்கச்செய்யும்
...தக ரினஞ்சேராது பயனுள மக்களாக்கும்
...தலி...தனைநேசிக்குங் கல்வியென் றறிகுவாயே

...ன்றிடு மிடங்கள்தோறுஞ் சிறந்திடும் புகழளிக்கும்
...றினி லுள்ளோர்தன்னை மதித்திடச் செய்யுங்கல்வி

நன்றிக்கி வித்துமாக்கும் நல்லதோ ரொழுக்கங்கூட்டும்
என்றுமே யிடும்பைபோக்கும் ஈடிலாக் கல்வியாலே

மாதருங் கற்றாராகில் மனையறஞ் சிறப்புண்டாகும்
சோதரர் மைந்தர் தம்மைச் சுயமதிப் படையச்செய்வ
தீதறும் விருந்தையாயச் சிறந்திடு மதியுண்டாகும்
காதலர் உரிமையீந்து கனிவுடன் வாழ்குவாரே

முற்றிற்று.

மதுரை
விவேகானந்தா பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது